www.Padasalai.Net www.CBSEtips.in

**வகுப்பு : 6**

தேர்வு எண் | | | | | | |

# இரண்டாம் பருவம்- தொகுத்தறி மதிப்பீடு(SA)-2022-23

நேரம் : 2.00 மணி]

## அறிவியல்

[மொத்த மதிப்பெண்கள் : 60

பகுதி – அ





**I. சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.** **10x1=10**

1. வெப்பத்தின் அலகு ---------
   அ) நியூட்டன் ஆ) ஜீல் இ) வோல்ட் ஈ) செல்சியஸ்
2. வேதி ஆற்றலை மின்னாற்றலாக மாற்றும் சாதனம் -------
   அ) மின்விசிறி ஆ) சூரிய மின்கலன் இ) மின்கலன் ஈ) தொலைக்காட்சி
3. கீழ்க்கண்டவற்றுள் எது நற்கடத்தி?
   அ) வெள்ளி ஆ) மரம் இ) அழிப்பான் ஈ) நெகிழி
4. காற்று மாசுபாடு, அமில மழைக்கு வழிவகுக்கும். இது ஒரு ------ ஆகும்.
   அ) மீள் மாற்றம் ஆ) வேகமான மாற்றம்
   இ) இயற்கையான மாற்றம் ஈ) மனிதனால் ஏற்படுத்தப்பட்ட மாற்றம்
5. தாவரங்களில் வாயுப் பரிமாற்றம் நடைபெறும் இடம் ------ ஆகும்.
   அ) இலைத்துளை ஆ) பச்சையம் இ) இலைகள் ஈ) மலர்கள்
6. காற்றுக் கலவையில் எரிதலுக்கு துணைபுரியும் பகுதி ----- ஆகும்.
   அ) நைட்ரஜன் ஆ) கார்பன் – டை– ஆக்ஸைடு
   இ) ஆக்சிஜன் ஈ) நீராவி
7. செல்லின் அளவைக் குறிக்கும் குறியீடு ------
   அ) சென்டி மீட்டர் ஆ) மில்லி மீட்டர் இ) மைக்ரோ மீட்டர் ஈ) மீட்டர்
8. கீழே உள்ளவற்றில் எது ஒரு செல் உயிரினம் அல்ல?
   அ) ஈஸ்ட் ஆ) அமீபா இ) ஸ்பைரோகைரா ஈ) பாக்டீரியா
9. மனிதனின் முதன்மையான சுவாச உறுப்பு -----
   அ) இரைப்பை ஆ) மண்ணீரல் இ) இதயம் ஈ) நுரையீரல்கள்
10. விரலி ஒரு ------ ஆக பயன்படுகிறது.
    அ) வெளியீட்டுக் கருவி ஆ) உள்ளீட்டுக் கருவி இ) சேமிப்புக் கருவி ஈ) இணைப்புக் கம்பி

**II. கோடிட்ட இடங்களை நிரப்புக :** **5x1=5**

11. வெப்பநிலையின் SI அலகு ------
12. ------ என்பது மின்சுற்றை திறக்க அல்லது மூட உதவும் சாதனமாகும்.
13. சுவாசக் கோளாறு உள்ள நோயாளிக்கு கொடுக்கப்படும் வாயு ------ ஆகும்.
14. செல் என்ற வார்த்தையை உருவாக்கியவர் -----
15. நாளமில்ல சுரப்பிகளால் சுரக்கப்படுகின்ற வேதிப்பொருள்களுக்கு ----- என்று பெயர்.

**III. பொருத்துக :** **5x1=5**

| குறியீடு | | விளக்கம் |
|---|---|---|
| 16.  | – | திறந்த சாவி |
| 17.  | – | மின் கலன் |
| 18.  | – | ஒளிரும் மின்விளக்கு |
| 19.  | – | மின்கல அடுக்கு |
| 20.  | – | ஒளிராத மின்விளக்கு |



Kindly send me your questions and answerkeys to us : Padasalai.net@gmail.com

பிரிவு – ஆ

**IV. ஏதேனும் பத்து வினாக்களுக்கு விடையளி.** **10x2=20**

21. வெப்ப விரிவு என்றால் என்ன?

22. **சரியா அல்லது தவறா என எழுதுக.**
   1. போரோசிலிகேட் கண்ணாடியானது வெப்பப்படுத்தும்பொழுது அதிகம் விரிவடையாது.
   2. வெப்பம் மற்றும் வெப்பநிலை இரண்டும் ஒரே அலகினைப் பெற்றுள்ளன.

23. **பொருந்தாததை வட்டமிடுக. அதற்கான காரணம் தருக.**
   சாவி, மின்விளக்கு, மின்கல அடுக்கு, மின்னியற்றி

24. தொடரிணைப்பு ஒன்றிற்கு மின்சுற்றுப் படம் வரையவும்.

25. தாவரங்கள் மட்குதல் என்ன வகையான மாற்றம்?

26. கரும்புச் சர்க்கரையை நன்றாக வெப்பப்படுத்தும் போது என்ன நிகழும்? இதில் நடைபெறும் ஏதேனும் இரண்டு மாற்றங்களைக் குறிப்பிடுக.

27. வளிமண்டலத்தில் உள்ள ஐந்து அடுக்குகளின் பெயர்களைத் தருக.

28. பணியிலுள்ள போக்குவரத்துக் காவலர் முகமூடி அணிவதேன்?

29. **ஒப்புமை தருக.**
   (i) ஸ்பைரோகைரா : தாவரசெல் :: அமீபா : --------
   (ii) உணவு உற்பத்தியாளர் : பசுங்கணிகம் :: ஆற்றல் மையம் : -------

30. புரோகேரியாட்டிக், யூகேரியாட்டிக் செல்கள் – வேறுபடுத்துக.

31. **கீழுள்ளவற்றை முறைபடுத்தி எழுது.**
   சிறுநீர்ப் புறவழி → சிறுநீர் நாளம் → சிறுநீர்ப்பை → சிறுநீரகம்

32. மூவகையான இரத்தக்குழாய்களின் பெயர்களை எழுதுக.

33. கணினியின் கூறுகள் யாவை?

பிரிவு – இ

**V. ஏதேனும் நான்கு வினாக்களுக்கு விடையளி.** **4x5=20**

34. வெப்பம் மற்றும் வெப்பநிலை வேறுபடுத்துக.

35. மின்கடத்திகள் மற்றும் அரிதிற்கடத்திகள் குறித்த சிறுகுறிப்பு வரைக.

36. கீழே கொடுக்கப்பட்டுள்ள ஒவ்வொரு மாற்றத்திற்கும் தகுந்த ஒரு எடுத்துக்காட்டு தருக.
   அ) மெதுவான / வேகமான மாற்றம்
   ஆ) மீள் / மீளா மாற்றம்
   இ) இயற்பியல் / வேதியியல் மாற்றம்
   ஈ) இயற்கையான / செயற்கையான மாற்றம்
   உ) விரும்பத்தக்க / விரும்பத்தகாத மாற்றம்

37. தாவரங்களும், விலங்குகளும் ஆக்சிஜன் மற்றும் கார்பன் – டை – ஆக்சைடு இவற்றின் இடையே உள்ள சமநிலையை எவ்வாறு பாதுகாக்கின்றன?

38. புரோகேரியாட்டிக் செல்லின் படம் வரைந்து பாகங்களைக் குறி?

39. கழிவு நீக்க மண்டலத்தில் முக்கியமான நான்கு பாகங்களை எழுதுக. மற்றும் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளி.
   1. கழிவு நீக்க மண்டலத்தில் எந்த பாகம் இரத்தத்திலுள்ள அதிக உப்பு மற்றும் நீரை நீக்குகிறது.
   2. சிறுநீர் எங்கு சேமிக்கப்படுகிறது?
   3. மனித உடலிருந்து சிறுநீர் எந்தக் குழல் வழியாக வெளியேற்றப்படுகிறது?



Kindly send me your questions and answerkeys to us : Padasalai.net@gmail.com